மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியிலே அந்தக் கேள்வி எழாது. அந்தக் கேள்வியை எழுப்புவதற்கு ஏதுவாக மானியம் வருகிறது. அப்பொழுது அந்தக் கேள்வியை எழுப்பலாம்.

திரு. கே. ஆர். கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, செவிலியர்கள் அணியும் உடை கவர்ச்சியும் வசதியும் இல்லாமல் இருப்பதால், நம்நாட்டு நாகரிகத்திற்கு ஏற்ற வகையில் உடை அளிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அங்கத்தினருக்கு உடை கவர்ச்சியாக இருக்க வேண்டுமென்ற அக்கறை ஏற்பட்டிருக்கிறது. அரசாங்கத்திற்கு உள்ள அக்கறை மிக்க வசதியாகப் பணியாற்றக்கூடிய வகையில் உடை இருக்க வேண்டுமென்பது. இப்போது அவர்கள் அணிகின்ற உடைதான் பணியாற்றுவதற்கு வசதியாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சூலூரிலுள்ள மருத்துவ மனை

* 535.—திரு. கே. என். குமாரசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பல்லடம் தொகுதியில் உள்ள சூலூர் ஆஸ்பத்திரியை விஸ்தரித்து நோயாளிகளுக்கு தங்கி சிகிச்சையளிக்கும் திட்டம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இல்லை.

செம்மிபாளையத்துக்கு ஆரம்ப சுகாதார நிலையம்

* 536 வினு—திரு. கே. என். குமாரசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பல்லடம் தொகுதியில் பல்லடம் பஞ்சாயத்து யூனியனுக்கு உட்பட்ட செம்மி பாளையத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று கட்டப்பட்டு கட்டடம் பேஸ் மட்டம் வந்து நின்று விட்டது உண்மையா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இல்லை.

அரசு அச்சகத்தில் இரவு நேரத் தொழிலாளர்கள்

* 537 வினு.—திரு. கே. என். குமாரசாமி : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசு அச்சகங்களில் இரவு நேரங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு இலவசமாக ரொட்டியும் டீயும் கொடுக்க திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையிலுள்ளதா ?